**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| | | Sessions Case No.163 of 2019 |
| Preliminary register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| | | Prosecution | : PW- 10 |
| Deposition of witness for | : | Defence | : |
| | : | Court | : |

| | |
|---|---|
| Name | : மாகலட்சுமி |
| Husband Name | : சுகேந்திரன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17st day of October 2024.**

முதல் விசாரணை:

நான் தற்போது பெரியதளபட்டி கிராம உதியாளராக பணியாற்றி வருகிறேன். 04.05.2019 அன்று சிங்காரப்பேட்டை காவல் ஆய்வாளர் எனக்கு போன் செய்து காவல் நிலையம் வரச் சொன்னார். அங்கு காவல் நிலையத்தில் பாரதிராஜாவும் பிரசாந்தும் இருந்தார்கள். நானும் எங்கள் கிராம நிர்வாக அலுவலரும் முன்னிலையில் முதலில் பாரதிராஜா 09.04.2019 அன்று இரவு 11 மணிக்கு மேல் குடும்பத்திற்குள் பிரச்சனை நடந்ததாகவும், சண்டை நடந்ததாகவும் கூறினார்கள். பிறகு எதிரிகளை அழைத்து கொண்டு மிட்டப்பள்ளி பிரிவு ரோடு அருகே பகல் 12 மணி அளவில் சென்று ஓரமாக நின்று இருந்த RX 100 வண்டியை போலிசார் பிடித்தார்கள் அதன் பிறகு பாரதிராஜா வீட்டிற்கு சென்று கத்தி ஒன்றை பீரோவிற்கு அடியில் இருந்து எடுத்தார்கள் பிறகு பிரசாந்து வீட்டிற்கு சென்று சோப்பாவிற்கு அடியில் இருந்து ஒரு கத்தியை எடுத்தார்கள். பிறகு காவல் நிலையம் வந்து போலிசார் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் மூன்று கைபற்றுதல் மகஜர்களிலும் உள்ள 2 வது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையதுதான் அவை முறையே அ.சா.ஆ. 9 முதல் 13 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்:

எதிரிகளை போலிசார் எப்போது கைது செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மிட்டப்பள்ளி பிரிவு ரோடு என்பது பொது மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் எழுத்தால் எழுதிய தாளில் கையெழுத்து செய்தேன். ஒப்புதல் வாக்கு மூலத்தில் என் முன்னிலையில் யார் கையெழுத்து செய்தார்கள் என்றால் நானும் உதவியாளரும் கையெழுத்து செய்தோம் வேறுயாரும் கையெழுத்து செய்யவில்லை. VAO கையெழுத்து செய்த அன்றே நானும் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். பாரதிராஜாவின் வீடு எந்த வகையான வீடு என்றால் தார்சு வீடு ஆகும். பாரதிராஜாவின் வீடு சீட்டு வீடு என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் இல்லை. எதிரி வீட்டிற்குள் நான் சென்றேனா என்றால் இல்லை. போலிசாரே கத்தியை பாக்கெட்டில் வைத்து எடுத்து வந்திருக்களாம் என்றால் அது பற்றி தெரியாது. கத்தியில் இரத்த கறை எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் இடம் இருந்து என் முன்னிலையில் சான்று பொருள் எதுவும் கைப்பற்றப்பட வில்லை என்றும் நான் போலிசாரின் கையிறுப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

ஒம்/- திருமதி. G.கலைவாணி, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம்,
ஊத்தங்கரை.